# அம்பத்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

O.S.No. 23/2018

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திருமதி.உ. தாரணி என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/ பிரதிவாதி தரப்பின் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் ஆண்டின் 10வது சட்டத்தில் வகை முறைகளுக்கு உட்பட்டு 2025ம் ஆண்டு நவம்பர் திங்கள் 24 –ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| வா.சா.1 | 24.11.2025 |
| பெயர் மனோன்மணி | தந்தை/ கணவர் பெயர் |
| தொழில் | வயது |
| இனம் | சமயம் |
| கிராமம் | வட்டம் |

<u>4, 5ம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>:–

1. நான் இவ்வழக்கில் 2ம் பிரதிவாதி ஆவேன். எனக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்த 1மற்றும் 2 வாதிகள் யார் என்றால் எனக்கு உறவுமுறை இல்லை. 1,2 வாதிகள் எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார்என்ற விவரம் எனக்கு தெரியாது. தேவேந்திரன் யார் என்று தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கில் 1,2 வாதிகளுக்கும் இறந்துபோன தேவராஜ் என்பவருக்கும் எந்த உறவும் இல்லை. 1,2 வாதிகள் யார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் வேறுவழக்கு எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரிதான். அ.வ.எண் 5/2019 இந்த நீதிமன்றத்தில் உள்ளது என்றால் சரிதான்.

2. எனது அண்ணனுக்கு திருமணம் ஆனது சம்மந்தமாக கிராமநிர்வாக

அலுவலர் என்னிடம் விவரம் கேட்டார். எனது அண்ணனுக்கு திருமணம் ஆகவில்லை என்று சொன்னேன். நான் ஆட்சேபனை செய்ததால் எனக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. நானும் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தேவராஜ் என்பவருக்கு திருமணம் ஆகிவிட்டதா என்றால் இல்லை. தேவராஜ் என்பருக்கு ராதிகா என்பவருடன் திருமணம் ஆகி அருண் என்ற குழந்தை உள்ளதா என்றால் இல்லை.  வாதி தாக்கல் செய்த ஆவணங்கள் உண்மை இல்லை என்றபட்சத்தில் இந்த வழக்கு தள்ளுபடி செய்வதில் எனக்கு ஆட்சேபனை உள்ளதா என்றால் இல்லை.

இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது, மறு விசாரணை இல்லை.